Source: *Tamil Murasu*, p3
Date: 16 January 2018

# நீரின் தரத்தைக் கண்காணிக்கும் ‘அன்னப் பறவைகள்’

அன்னப் பறவைகள்போல தோற்றமளிக்கும் கண்காணிப்பு இயந்திரங்கள் தீவு முழுவதும் உள்ள நீர்த்தேக்கங்களில் மிதக்கவிடப்படும் என்று பொதுப் பயனீட்டுக் கழகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது. இதன் மூலம் நீரின் தரம் கண்காணிக்கப்படும் என்று அது குறிப்பிட்டது.

நீரின் தரத்தை மதிப்பிடும் திறன் கட்டமைப்பு என்று அழைக்கப்படும் அன்னம், நீரின் தரம் குறித்த தகவல்களைச் சேகரித்து அனுப்பி வைக்கும்.

இயற்கை சூழலோடு ஒட்டியிருக்கும் வகையில் கண்காணிப்புச் சாதனங்கள், அன்னப் பறவைகள் போல வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுப் பயனீட்டுக் கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், சுற்றுச்சூழல் ஆய்வு கழகம் மற்றும் வெப்பமண்டல கடற்துறை அறிவியல் கழகம் ஆகியவை இணைந்து இந்த அன்னப் பறவைகளை தயாரித்துள்ளன. கடந்த 2016ஆம் ஆண்டில் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் அதன் ஆற்றல் சோதிக்கப்பட்டது. இது, நீர்த்தேக்கங்களின் நிலையைப் புரிந்து கொள்ளவும் தரத்தை மேம்படுத்தவும் கழகம் புகுத்தியுள்ள தொழில் நுட்பங்களில் ஒன்று.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.